பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 26 ஞாயிற்றுக்கிழமை (09-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 74

# 8,000 ஈழத் தமிழரைக் கொன்றதாக
# குற்றம்சாட்டி இந்தியா மீது வழக்கு!

## உலக நீதிமன்றில் தாக்கல் செய்ய விடுதலைப் புலிகள் ஏற்பாடு

கொழும்பு, பெப்ரவரி 9

வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவம் தங்கியிருந்த காலத்தில், சுமார் எண்ணாயிரம் ஈழத் தமிழரைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டி, சர்வதேச நீதிமன்றத்தில் [International Court of Justice] இந்தியாவுக்கு எதிராகத் தாம் வழக்குத் தாக்கல் செய்யக்கூடும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளருக்கு வெளியிட்ட தகவலில் இதுபற்றித் தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனையும், உளவுப் பிரிவுத் தலைவர் திரு. பொட்டம்மானையும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன் சென்னை நீதிமன்றில் சமுகமளிக்குமாறு அண்மையில் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

அதன் பின்னர் பி. பி. ஸிச் செய்தியாளர் கலாநிதி பாலசிங்கத்துடன் உரையாடினார். அப்போது கலாநிதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஐ. நா. சபையின் அங்கமே சர்வதேச நீதிமன்றம்

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கங்களுள் ஒன்று சர்வதேச நீதிமன்றமாகும்.

ஒல்லாந்தின் தலைநகர் ஹேக்கில் சர்வதேச நீதிமன்றின் தலைமையகம் அமைந்துள்ளது. எனினும் தேவைகளைப் பொறுத்து, வசதியான இடங்களில் நீதிமன்றம் அமர்வுகளை நடத்தும்.

சர்வதேச ஒப்பந்தம் ஒன்றின் கீழ் சர்வதேச நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சாசனத்தின் ஓர் உட்பிரிவாக சர்வதேச நீதிமன்றம் பற்றிய ஷரத்துகள் இடம்பெற்றிருப்பதன் மூலம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## "குவேக்கர்" குழுவினர் புலிகளுடன் பேச்சு நடத்துவர்

இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கும் "குவேக்கர்" சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் இங்கு விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு யோகரத்தினம் யோகி ஆகியோருடன் அவர்கள் பேச்சு நடத்துவர் என்றும் —

அவர்கள் இங்கு சில தினங்கள் தங்கியிருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## 10க்கும் அதிக படையினர் கரடியனாறில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 9

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது நேற்று முன்தினம் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது ஓர் அதிகாரி உட்பட பத்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை இரணைக்குளம் என்ற இடத்தில் இருந்து கரடியனாறு பகுதியை நோக்கி ரோந்து சென்ற இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் மீதே மயிலவெட்டுவான் என்னும் இடத்தில் வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிற்பகல் 2 மணிவரை தொடர்ந்து இரு பகுதியினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றதாகவும் —

அதிரடிப் படையினருக்கு உதவியாக இரு பொம்மர்களும் இரண்டு ஹெலிகளும் கடும் குண்டுவீச்சுத் தாக்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், பெப். 9

நேற்று முன்தினம் கரடியனாறு மயிலவெட்டுவான் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின்போது விடுதலைப் புலிகளினால் பல்வேறு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விவரம் வருமாறு:-

- ★ ஆர். பி. ஜி. ரகத் துப்பாக்கி — 1
- ★ 40 மி. மீ. கைத்துப்பாக்கி — 1
- ★ ரி 56 ரகத் துப்பாக்கிகள் — 7
- ★ அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 18

மேலும் தொலைத்தொடர்பு சாதனம், தொலைநோக்கி, மிதிவெடி அகற்றும் சப்பாத்து ஆகியவை உட்பட பெருமளவு இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. [உ-5]

## 3 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 9

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

அருள்நாதன் [தம்பிப்பிள்ளை பேரின்பராசா— வெல்லாவெளி], ரவீந்தர் [சபாரட்ணம் உருத்திராதரன் — பெரியநீலாவணை], மயிரனார் ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர். [உ-5]

## 13 பேரை கூட்டிச் செல்ல முயன்ற தமிழ் இளைஞருக்கு நோர்வேயில் தண்டனை

ஒஸ்லோ, பெப். 9

பதின்மூன்று இலங்கைத் தமிழர்களை நோர்வேக்குள் கடத்த முயன்ற இளைஞர் ஒருவருக்கு நோர்வே நீதிமன்றம் ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

13 தமிழர்களையும், 27 வயதான இந்தத் தமிழ் இளைஞர் டென்மார்க்கிலிருந்து நோர்வேக்கு வான் ஒன்றில் கூட்டி வந்ததாகவும், எல்லைக் காவல் நிலையத்தில் நிறுத்துமாறு கொடுக்கப்பட்ட உத்தரவுக்குக் கட்டுப்படாமல் வான் எல்லையைக் கடந்து சென்றபோது பொலீஸார் வானைத் துரத்திச் சென்று பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது,

டென்மார்க்கைத் தளமாகக் கொண்டு ஆட்களை ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டுபோய் விடுவதை இந்த இளைஞர் தொழிலாகக் கொண்டவர் என்றும் —

வானில் கொண்டு [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 3 ஆயிரத்து 465 கோடி ரூபா: கேட்டதை விட அதிகளவு ஸ்ரீலங்காவுக்கு நிதி உதவி!

### பாரிஸ் மாநாட்டில் கிடைத்தது

பாரிஸ், பெப். 9

ஸ்ரீலங்காவுக்கு மொத்தம் 3 ஆயிரத்து 465 கோடி ரூபா [82½ கோடி டொலர்] நிதி உதவி கிடைத்துள்ளது!

பாரிஸில் நடந்த இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் கூட்டத்தில், ஸ்ரீலங்கா அரசு கேட்டதை விட 105 கோடி ரூபாவை [2½ கோடி டொலர்] அதிகமாக வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது,

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதார முன்னேற்றத்தையும், கொள்கைகளையும் பாராட்டி உலக வங்கி, சர்வதேச நாணய சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன அறிக்கைகள் வெளியிட்டிருந்தன. அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் ஸ்ரீலங்கா விண்ணப்பித்த தொகையை விட அதிக தொகையை வழங்க உதவும் நாடுகள் முடிவு செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அபிவிருத்திக்கு [illegible] !

### யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் வற்புறுத்து

பாரிஸ், பெப். 9

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஐரோப்பிய சமூக நாடுகள், சர்வதேச மன்னிப்புச் சபையின் பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டன. அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகள் தடங்கல் இன்றித் தொடர வேண்டும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [இ]

### பாரிஸில் நேற்று முன்தினம் ஈழத்தமிழர் ஆர்ப்பாட்டம்

பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் நகரில் ஈழத் தமிழர்கள் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர் என்று பி. பி. ஸி. செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் உலக வங்கி கட்டடத்தில் நடந்து கொண்டிருந்த வேளையில், கட்டடத்துக்கு வெளியே திரண்ட தமிழர்கள் கோஷங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசை கண்டித்தும், ஸ்ரீலங்காவுக்கு உதவி அளிக்க வேண்டாம் எனவும் அவர்கள் கோஷமிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [ஒ-10]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆ. சுப்பிரமணியம்

(உரிமையாளர், யாழ். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை)

நற்றமிழ்க் கல்வியோங்க நாடொறும்
பணிகள் செய்தோன்
கற்பவர்க்கான நூல்கள் கவினுறப்
பதிப்பித்துள்ளான்
விற்பனன், தருமசிந்தை மிகுந்தவன்
வேண்டுவார்க்குக்
கற்பக தருவாய் நின்ற சுப்பிரமணியம்
கணத்திலோர் அமரரானார்.

த. துரைசிங்கம்,
(உதவிக் கல்விப்பணிப்பாளர்).

யாழ்ப்பாணம்,
08-02-92
[19649]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

**திரு. முருகையா சூரியகாந்தி**
(மேற்பார்வையாளர்,
இலங்கை துறைமுக
அதிகாரசபை
திருகோணமலை)
தோற்றம்:
**30 — 05 — 1936**
மறைவு:
**07 — 01 — 1992**

**திரு. வைரமுத்து சௌந்தரராஜா**
''Jaffarjee Bros.'',
(கணக்குப் பகுதி),
கொழும்பு.
தோற்றம்:
**22 — 06 — 1945**
மறைவு:
**11 — 01 — 1992**


பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எமது அன்பு தெய்வங்களின் மரணச் சடங்குகள் கொழும்பில் நடைபெற்றன. இதில் நேரடியாகக் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதல்களை வழங்கிய சகலருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், 10 - 02 - 1992 அன்று இல. 3A, 39 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையில் நடைபெறும் 31ஆம் நாள், வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொண்டு அன்னார்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய பிரார்த்திக்குமாறு வேண்டி அழைக்கிறோம்.

குடும்பத்தினர்,
வை. சிவகணநாதன்,
(மைத்துனரும், சகோதரரும்).

'அம்பிகைவாசம்',
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
[19639]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 1908 — 11 — 14



இறப்பு: 1992 — 01 — 10

வர்த்தகக் கல்வியின் சிற்பி

### திரு. மு. சுப்பையா

[Chamber of Commerce - London]

எமது கல்லூரியில் 1949 ஆம் ஆண்டு முதல் 1965 ஆம் ஆண்டு வரை வர்த்தகக் கல்வியின் நல்லாசானாக விளங்கிய பெருந்தகையின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

அமரரின் திருவுருவப்படத் திரை நீக்கமும், நினைவுக் கூட்டமும் 11 - 02 - 1992 செவ்வாய் பகல் 12-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்.

யா/ கனகரத்தின ம.ம.வி.,
யாழ்ப்பாணம்.
[19650]

## நீதிமன்ற உத்தரவு கையளிப்பு

கொழும்பு, பெப். 9

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானும் இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்று நீதிபதி பிறப்பித்த உத்தரவின் நகலை கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

இந்திய நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்ற இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்பை இந்தியா நாடும் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பொறுப்பதிகாரி திரு. செர்ரி ஜோர்ஜ் தெரிவித்தார்.

பிரபாகரனும் பொட்டம்மானும் சரணடைய வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு அடுத்த சில நாட்களில் விளம்பரமாக இலங்கைச் செய்தித்தாள்களில் பிரசுரமாகும் என்றும் திரு. செர்ரி ஜோர்ஜ் கூறினார். [இ]

[முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்]

## இனம் தெரியாத சடலம் அடக்கம்

தென்மராட்சி, பெப். 9

பளை, இத்தாவில் சந்தியிலுள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் அநாதரவாகக் காணப்பட்ட — 60 வயது மதிக்கத்தக்க வயோதிபரின் சடலம் — உரிமை கோரப்படாத நிலையில் — நேற்று முன்தினம் பளையில் அடக்கம் செய்யப்பட்டது.

இறந்தவரின் உடைகளும், சில பொருள்களும் சாவகச்சேரி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. [ஓ-117]

## நிறைவு விழா

யாழ்ப்பாணம், பெப். 9

திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவத் தொண்டர் நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, இன்று காலை 9 மணிக்கு நிலையத்தில் கொண்டாடப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். [ஓ-5]

## 'பகவத்கீதை' வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 9

கந்தர்மடம் - ஸ்ரீ சிவ குருநாத குருபீடத்தில், இன்று மாலை 3 மணிக்கு, குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன் 'பகவத்கீதை' வகுப்பு ஆரம்பிக்கப்பட உள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்த வகுப்பை பிரம்மஸ்ரீ சி. வெங்கடேஸ்வர சர்மா நடத்தவுள்ளார்.

## புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 9

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் — புதிய கட்டடத் திறப்பு விழா நாளை காலை 9 30 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. அநு. வை. நாகராஜன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திறப்பு விழா நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

பெற்றோர், ஆதரவாளர்கள் மற்றும் பழைய மாணவர்களின் உதவியுடன் இக்கட்டடம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நெளுக்குளத்தில் கைதான 6 விவசாயிகளும் கொலை

யாழ்ப்பாணம், பெப். 9

கடந்த ஆண்டு இறுதியில் வவுனியா நெளுக்குளத்தில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஆறு விவசாயிகள் கடந்த வார இறுதியில் படுகொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் ஸ்ரீலங்கா படையினர் நெளுக்குளத்தில் மேற்கொண்ட ''கறுப்பு நரி'' இராணுவ நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து அச்சமயம் அறுபதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-5]

## CONDOLENCE

The staff and students of 'Vembadi TECEP Centre' share the (moments of) sorrow of Mr. N. Thevabalasingam on the loss of his beloved wife.

**" May Her Soul Rest In Peace "**

**Vembadi 'TECEP'**
**English Forum**

[19652]

## கண்ணீர் அஞ்சலி

### பண்டிதர் திரு. வே. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் திரு. வே. சண்முகலிங்கம் அவர்களின் திடீர் மறைவு எமது சமூகத்திற்குப் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து அல்லலுறும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உறவினர் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும செலுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம்.
1992-02-09

ஆசிரியர் கழகம்
யாழ். இந்துக் கல்லூரி

[C/1400]

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பண்டிதர் திரு. வே. சண்முகலிங்கம்

தமிழர்களின் தலைநிமிர்கழகம் யாழ். இந்துக் கல்லூரி. நாவலர் கண்ட கனவை 100 வருடங்களாக நனவாக்கிக் கொண்டிருக்கும் கலையகம் இது. கனவு நனவாக அரும்பாடுபட்டவர்களின் முதல் வரிசையில் வைத்துக் கணிக்கப்படக்கூடியவர்களில் ஒருவர் எங்கள் ஆசான் அமரர் பண்டிதர் வே. சண்முகலிங்கம் அவர்கள்.

சைவமும் தமிழும் ஒலிக்கவும் ஒளிரவும் செய்யும் இந்து இளைஞர் கழகம், தமிழ் மன்றம் — இவற்றின் தலைவராக, பொருளாளராக இருந்து அவர் புரிந்த பணிகள் மெச்சத்தக்கவை; போற்றத்தக்கவை.


பிரார்த்தனை மண்டபத்தை அவர் சிறப்பித்த காட்சி இன்றும் என்றும் எம்மனக் கண்ணே பிரகாசித்துக் கொண்டிருக்கும். அன்னாரின் மறைவு யாழ். இந்துவுக்கு குறிப்பாக தமிழ், சைவத்துறைகளுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் பணிகளைத் தொடர்வதன் மூலம் அவரின் ஆத்ம சாந்திக்கு வழிவகுப்போமாக.

பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக் கல்லூரி

[C/1501]

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு: 1930 — 03 — 08



விண்ணுலகு: 1991 — 01 — 21

அமரர்

### முத்தையா மகாதேவன் (M. A.)

[முன்னாள் ஆசிரியர் பரமேஸ்வராக் கல்லூரி, இளைப்பாறிய உப அதிபர் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்]

**திதி: 09 — 02 — 1992**

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர்விட்டு எரிந்து அணைந்த ஒளிவிளக்கே! நீங்கள் பிரிந்து ஓராண்டு சென்றிடினும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது.

மனைவி, மகள்.

'' Spring '',
K. K. S. Road,
Kokuvil.
[19596]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன், பொட்டம்மான் விவகாரம்:

# இலங்கை அதிகாரிகள் உயர்மட்டத்தில் பரிசீலனை

கொழும்பு, பெப். 9

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோர் மீது சென்னை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பாகவும், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உதவுமாறு இந்திய அதிகாரிகள் விடுத்த கோரிக்கைபற்றியும் இலங்கை வெளிநாட்டு அமைச்சு நேற்று முன்தினம் உயர்மட்டத்தில் பரிசீலனை செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் டாக்டர் நெவில் கனகரத்தினா அனுப்பி வைத்த செய்தி தங்களுக்குக் கிடைத்துள்ளது என்றும் —

புலிகளின் தலைவர் பிரபாகரனையும் மற்றும் பொட்டம்மானையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய இந்திய அரசாங்கம் இலங்கையின் உதவியைக் கோருகின்றது என்று அவர் அச்செய்தியில் தெரிவித்துள்ளார் என்றும் வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

வெளிநாட்டமைச்சு இந்த வேண்டுகோளை விரிவாக ஆராய்ந்து தனது சிபார்சுகளை அரசாங்கத்துக்கும், வெளிநாட்டமைச்சுக்கும் அறிவிக்கும்.

கடந்த செவ்வாய் அன்று இந்திய வெளிவிவகார அமைச்சு இணைச்செயலாளர் ராஜன் அபயங்கார் இலங்கை உயர் ஸ்தானிகரை சந்தித்து இது குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

பிரபாகரனையும், பொட்டம்மானையும் கைது செய்ய இந்திய அரசாங்கத்தின் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்கலாம் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்த வேண்டுகோள் உத்தியோகபூர்வமாக இந்திய அரசாங்கத்தினால் விடுக்கப்படவில்லை. இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் ஒத்துழைக்கும் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [த]

## 'ஹெல உறுமய' அமைப்புக்கு சுதந்திரக்கட்சி தடைவிதிப்பு

கொழும்பு, பெப். 9

சிங்கள தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பது என்ற போர்வையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள ஒரு சில எம். பிக்களால் ஆரம்பிக்கப்பட்ட ''ஹெல உறுமய'' என்ற அமைப்பை தடை செய்வதென சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு செய்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதேவேளை—

ஹெல உறுமயவில் தான் இணையவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பி. திரு. மகிந்த ராஜபக்ஸ அறிவித்துள்ளார். [த]

## தனி நீதிமன்ற நீதிபதியாக மேலும் ஒருவர் நியமனம்

சென்னை, பெப். 9

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையை விசாரிக்கும் தனி நீதிமன்றத்தின் மேலதிக நீதிபதியாக எம். சௌந்திரபாண்டியன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

தற்போதுள்ள தனி நீதிபதி திரு. எஸ். எம். சித்திக் விடுமுறையில் செல்லும் காரணத்தாலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் அதிகரித்திருப்பதாலும் மேற்படி புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [த-5]

## இளைக் குழுத் தேர்தல்

தென்மராட்சி, பெப். 9

சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பதினொரு கிளைக் குழுக்கான தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் 99பேர் சங்க பொதுச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [த-117]

## ஊவாவில் 2 புலிகள் சிக்கியுள்ளனராம்

ஊவா தோட்டப் பகுதியில் ஊடுருவி உள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களான நாகேஷ்ும், விஷ்ணுவும் அப்பகுதியில் இருந்து வெளியேற முடியாமல் சிக்கி உள்ளனராம்.

பொலீஸாரை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. [த-எ]

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 9

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் கும்பாபிஷேக தினவிழா இன்று நடைபெறும்.

அதனையொட்டி விசேட பூசை வழிபாடுகளும், இரவு 8-00 மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் நிகழ்த்தும் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (த-5)

## பாதுகாப்பு காரணங்களுக்காக திருமலை வங்கிகள் மூடப்படுமாம்

கொழும்பு, பெப். 9

பாதுகாப்புக் காரணங்களுக்காக திருகோணமலையில் உள்ள வங்கிக் கிளைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்க வேண்டும் என்று அந்த மாவட்டத்தின் இணைப்பதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் கேட்டுள்ளார்.

பாதுகாப்பு நிலைமை சீர்திருந்தும் வரை கிராமப்புறங்களில் உள்ள மக்களின் நன்மைக்காக நடமாடும் வங்கிச் சேவையை ஒழுங்கு செய்யலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

திருமலை மாவட்ட உள்ளூர் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் பிரிகேடியர் சிறி பீரிஸ் இத் தகவலைத் தெரிவித்தார்.

## 21 பேரின் நினைவஞ்சலி

சாவகச்சேரி, பெப். 9

திருகோணமலை யமாலியா கடற் பிரதேசத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் சிக்குண்டு வீரமரணமடைந்த 21 வீரவேங்கைகளின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நுணாவில் மேற்கு லெப். கேர்ணல் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. வீரமணி புலிக் கொடியை ஏற்றி வைத்தார். தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா மங்கள தீபம் ஏற்றி வைத்தார்.

திருகோணமலைமாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். [த-31]

## கிணற்றுக்குள் 72 சடலங்கள்: நாடாளுமன்றில் பிரஸ்தாபம்

கொழும்பு, பெப். 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் கிணறு ஒன்றுக்குள் இருந்து 72 இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக் குழு ஒன்றை பிரதம மந்திரி நியமிக்க வேண்டும் என்று தமிழ் எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியதாக அறிய வருகிறது.

அவர் இது பற்றித் தெரிவித்ததாவது;

யாழ். மாவட்டத்தில் மண்டைதீவு, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் இருந்து பல இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பாகப் பெற்றோர்கள் அதிகாரிகளிடம் முறையிட்ட போது அவர்கள் விசாரணைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள கிணறு ஒன்றுக்குள் இருந்து 72 சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டன. சடலங்களின் கண்களும், கைகளும் கட்டப்பட்டிருந்தன. தலைகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன.

இது பற்றிப் பிரதமருக்குத் தெரியுமா? இது தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அவர் சொன்னார். (த)

## பிரார்த்தனை

இலங்கைக்குப் பொருளாதார உதவிகளையும், வர்த்தக வாய்ப்புகளையும் வழங்கி வரும் அமெரிக்க நாட்டை ஆசீர்வதிக்கும் நோக்கில் பௌத்த குருமார்கள், ஓராண்டு காலம் நடத்தப்படும் பிரார்த்தனை ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர். (த-எ)

யாழ்ப்பாணம் வர

# தொண்டமானை அனுமதிக்கும்படி கல்விமான்கள் பேரவை கோரிக்கை

கொழும்பு, பெப். 9

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளை சந்தித்து, மீண்டும் சமாதானத்தை ஏற்படுவதற்காக அவர்களின் கருத்துக்களை அறிந்து வர அமைச்சர் தொண்டமானுக்கு நாடாளுமன்றம் அனுமதி அளிக்க வேண்டும்.

தமிழ்மூத்தோர் கல்விமான்கள் பேரவை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு எழுதியுள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேரவையின் தலைவர் என். ஸி. எஸ். சுந்தரமும், பொதுச் செயலாளர் கே. ஆனந்தக்குமாரசுவாமியும் கையொப்பமிட்டிருக்கும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தொண்டமான் மூத்த அனுபவ முதிர்ச்சி அடைந்த மதிப்பு மிக்க தலைவர் என விடுதலைப் புலிகளால் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

அவர் தீர்வுக்கான ஆதரவைத் தேடும் பணியில் கட்சிகள், தனிப்பட்டவர்களுடனும், விடுதலைப் புலிகளுடனும் கூட தனது சமாதானப் பணிக்கு ஆதரவு தேடினார். அந்த முயற்சி சில பலன்களை ஏற்படுத்தி இருக்கிறது.

அவருக்கெதிராக இப்போது கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் தமிழ் சமூகத்தின் பேச்சாளர். அவருடைய நடவடிக்கை தமிழ் சமூகத்திற்கு பெருமளவில் உதவும் என்பது நிச்சயம்.

இப்படியான தனிப்பெரும் ஆளுமை கொண்ட ஒருவர் மீது தெரிவுக்குழு எதுவித தவறையும் காணமுடியாது. விடுதலைப் புலிகள் மத்தியில் அவருடைய கருத்துக்கு செல்வாக்கு உண்டு.

விடுதலைப்புலிகளின் இணக்கம் இன்றி தயாரிக்கப்படும் சிபார்சுகள் எந்த ஒரு நோக்கத்தையும் ஈடேற்றி வைக்கப்போவதில்லை.

சமரசப் பேச்சுக்கு தொண்டமான் ஒரு சரியான தலைவராவார். இது தொடர்பாக அவருக்கு ஒரு கடமையும் உண்டு.

எனவே தொண்டமான் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தெரிவுக்குழு அனுமதிக்கவேண்டும். இதற்கு தெரிவுக் குழுவையும், அதன் தலைவரையும் ஜனாதிபதி இணங்க வைக்கவேண்டும்.

—இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த-5]


## பொது அறிவு நூல்

(நடப்பாண்டு, உள்ளூர், உலக விவகாரங்களுடன் கூடியது)

★ எழுதுவினைஞர் / கிராம சேவையாளர் / ஆரம்ப பள்ளி ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரியது.

★ பயனுள்ள வழிகாட்டி

தொகுப்பு: த. ந. பஞ்சாட்சரம்

New Science Academy யிலும் சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

[சி-1494]



## கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ d BASE III +
★ LOTUS 1-2-3

- விரிவுரைகள் செய்முறைப் பயிற்சியுடன்
- O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

CITY AND GUILDS- பரீட்சைக்குத் தோற்றுவோரும்,

தொழில் நுட்பக் கல்வி - பயில்வோருக்குமான,

Engineering Courses
பயிற்சி வகுப்புகள்

★ ELECTRICAL ★ CIVIL
★ ELECTRONICS ★ MECHANICAL

ஆரம்பம்: 14 - 02 - 1992
காலை 9—00 மணி

VANI INSTITUTE OF TECHNOLOGY
வடலியடைப்பு.

[19627]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

காற்றை வெளியேற்றும் மின்விசிறிகள் (எக்சோஸ் f பான்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நியூ விக்ரேஸ், B. M. C ஒழுங்கை, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [5033]

கடைக்குத் தேவையான 3 ஷோக்கேஸ்-கள், மேசைகள், கதிரைகள், 1/2 இஞ்சி முறுக்குக் கம்பி விற்பனைக்குண்டு. இல. 9, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். [5036]

மேடைத் தராசு தட்டுடன் விற்பனைக்கு உண்டு. 25, Tows, Avery Model, தொடர்பு: இல: 155 கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [19643]

**தேவை**

பெண்களுக்கான உடைகளை வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் உடைய பெண்கள் உடன் தேவை. றோசுகி ரெயிலறிங், இல. 5, பருத்தித்துறை வீதி, நல்லூர். [19641]

**மணமக்கள் தேவையா?**

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களும், மாற்றுச் சம்மந்தத்தை விரும்புவோரும், அல்லாத வரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19633]

**O/L கணிதம்**

92, 93 ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை அடைவதற்குக் கணிதம் கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc., 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [19631]

**இன்று செவ்வாய் மாற்றம்**

இன்று பின்னிரவு செவ்வாய் மகரராசிக்கு மாற்றமடைந்து உச்சமடைவதால் பொருளாதாரத் தடைகளையும், யுத்த அழுத்தங்களையும் நீக்கிச் சுமுகநிலையை உண்டாக்கும். சோபிதா, ரகுநாதன் புத்தக சாலைகள், யாழ்ப்பாணம். [நூலாசிரியர் Prof. சத்திய தாஸன்] [19634]

## மட்டு-கொழும்பு ரயில் சேவை

மட்டக்களப்பு, பெப். 9 நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை அடுத்த வாரம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மட்டக்களப்பில் செயலகத்தில் கடந்த சனி நடைபெற்ற திணைக்கள தலைவர்களின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச அதிபர் இ மௌனகுருசாமி தெரிவித்தார்

வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இந்த சேவை நடத்தப்படும். [த]

## எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது

கொழும்பு, பெப். 9 உள்ளூர் மீனவர்களினதும், கத்தோலிக்க தேவாலயத்தினதும் பலத்த எதிர்ப்பைத் தொடர்ந்து புத்தளம் மாவட்டத்திலுள்ள இரணவில என்ற இடத்தில் ஐந்து நட்சத்திர உல்லாச விடுதி ஒன்றையும், விளையாட்டு அரங்கையும் அமைக்கும் முயற்சியை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைவிட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் பிரார்த்தனையும்

மலர்வு: 03 - 06 - 1982

உதிர்வு: 10 - 01 - 1992

**தில்லைநாதன் தில்லைக்குமரன்**

[கொ/ ராஜகிரிய தமிழ் வித்தியாலய மாணவன்]

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர்களும், மாணவர்களும்.

தமிழ் வித்தியாலயம், ராஜகிரிய. [19640]

---

## ஓராண்டு சிரார்த்த திதி

**கந்தையா ஐயர் நடராசா ஐயர்**

(பிரபல சாற்றுப்படி அமைப்பாளர், அல்வாய்)

எதிர்வரும் 10 - 02 - 1992 (திங்கட்கிழமை) அன்னாரின் இல்லத்தில் சிரார்த்தமும், புதுக்குளங்கரை விநாயகர் ஆலயத்தில் அன்னதானமும் நடைபெறவுள்ளன. இவ்வைபவங்களில் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.


இங்ஙனம்:

- பிள்ளைகள்.

'' சரோசா வாசா '',
அல்வாய் தெற்கு, அல்வாய். [சி-1398]

---

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி காயத்திரி ஆனந்த ரமணி தர்மசோதி**

[விஞ்ஞான ஆசிரியை]

மலர்வு: 08 - 07 - 1955 உதிர்வு: 24 - 01 - 1988

திதி: 09 - 02 - 1992 (ஞாயிற்றுக்கிழமை)

ஆண்டு நான்கு மறைந்ததம்மா
ஆறுமோ எம்மனம் ஆறாதம்மா.

தங்கள் பிரிவால் நலிவுறும்:

கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரி, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், மற்றும் உன் அன்பால் ஈர்க்கப்பட்ட உறவினர்கள், நண்பர்கள்.

''ஸ்ரீசாலினி'',
காங்கேசன்துறை வீதி,
இணுவில். [19620]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 26 - 10 - 1910



மறைவு: 11 - 02 - 1989

**அமரர் செல்லப்பா ஆறுமுகம்**

(சட்டத்தரணியும், நந்தாவில் அம்மன் கோவில் தர்மகர்த்தாவும்)

திதி: தை பூர்வபக்க ஷஷ்டி

(09—02—1992)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

நந்தாவில்,
கொக்குவில். [19615]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16 - 12 - 1949



உதிர்வு: 22 - 01 - 1991

**செல்வி புவனேஸ்வரி நல்லப்பா**

(குப்பிளான்)

[யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்]

திதி: 9 - 2 - 1992

தாயினும் கருணைச் சகோதரியே!
உன் பிரிவு
ஆண்டாண்டு ஆனாலும்
ஆறாது ஆறாது தாயே!
தன்நலமற்ற பொன்மனச் செல்வியே.

உன் ஆத்மா சாந்திக்காக துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆற்றொணாத் துயருறும்:


தந்தை, அக்கா, தம்பிமார், மைத்துனிமார், மருமக்கள்.

உரும்பராய் தெற்கு. [19622]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

ஜனனம்: 21 - 10 - 1960



மரணம்: 21 - 01 - 1991

**இரஞ்சிற் கணேசகுமார் நடராசா**

[கலால் பரிசோதகர், யாழ்ப்பாணம்.]

பசுமை மாறாத இளமைக் கனவுகள்
துளிர் விட்டு காயாகி கனியுமுன்னே
காலன் கண்பட்டு மரணத்தைத் தொட்டாய்
உன் நினைவுகள் நெஞ்சத்தில் நிறைந்திருப்பதால்
எங்கள் கண்களில் கண்ணீராய் சுரக்கவைத்தாய்
இன்னொரு வேளையில் நீ -
எம்மிடம் வருவாய் மகனே
என்று கனவில் இதயத்தை சுமந்த படி
ஆண்டவனை வேண்டுகிறோம்

உமது ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

பெற்றோர்,
தம்பி — நிரஞ்சன்,
தங்கை — நந்தினி.

பசுமை நிறைந்த நினைவுகளைத் தந்து
என்னையும் இடையில் விட்டு
உமது இறுதிப் பயணத்தை இளமையிலேயே
ஆரம்பித்து இறைவனடி சேர்ந்தீரே
என் ஆருயிர் கணவரே.

மனைவி — மாலா.

[19605]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### திரை மறைவு நாடகம்!

யாழ்ப்பாணம் செயலகத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஜனவரி மாதச் செலவினங்களுக்குத் தேவையான 5 கோடியே 20 லட்சம் ரூபாவில், 2 கோடியே 70 லட்லம் ரூபாவுக்கு மட்டுமே கட்டுநிதி கிடைத்திருக்கிறது.

திறைசேரியில் நிதி நெருக்கடி நிலவுவதால் யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய கட்டுநிதியை ஒழுங்காக அனுப்ப முடியாமல் இருப்பதாக, கொழும்பில் தலைமை அமைச்சு அறிவித்திருக்கிறது!

அரசாங்கத்துக்கு நிதிநெருக்கடி உண்டென்பது உண்மைதான், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டி இருப்பதால், தொடர்ந்து நடத்தத் தீர்மானித்திருப்பதால், அதற்கென புறம்பான நிதி தேவைப்படுகிறது. யுத்தத்தில் வென்றுவிட வேண்டும் என்ற ஆசையுடனும், ஆர்வத்துடனும் நவீன ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன; ஆளணியினர் அதிக எண்ணிக்கையில் திரட்டப்படுகின்றனர்.

ஆகையால் மொத்தச் செலவினத்தில் போருக்கு ஒதுக்கப்பட்ட 25 சத வீதமும் போதாமற் போகும் என்பதில் சந்தேகமில்லை. மேலதிக செலவை ஈடுசெய்வதற்கு, மக்கள் சேவைத் துறைக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்குமென ஒதுக்கப்பட்ட நிதிகளை மாற்றுவதைத் தவிர அரசுக்கு வேறு மார்க்கம் இருக்காது என்பதும் வெளிச்சமானதே.

வேறு செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை யுத்தச் செலவுக்கு மாற்றும்போது சம்பந்தப்பட்ட துறைகள் பாதிப்புறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்தப் பாதிப்புகள் தென்னிலங்கை மக்கள் மீது சுமத்தப்பட்டால் அரசின் செல்வாக்குக் குறைவதோடு, பெரும் நெருக்கடிகளுக்கும் வழி செய்யும்.

அதனை அறிந்தே அரச அதிகாரிகள் யுத்தச் செலவின அதிகரிப்பால் உண்டாகும் சுமையை, பளுவை, பாதிப்பை தமிழர் தலை மீது சுமத்துகிறார்கள். அதன் பிரதிபலிப்பே யாழ்ப்பாண செயலகத்துக்கு போதிய கட்டுநிதியை அனுப்பாமல் நிதி நெருக்கடியைக் காரணம் காட்டுவது ஆகும்.

இந்தத் தில்லுமுல்லுகள் உலக வங்கிக்கோ, சர்வதேச நாணய சபைக்கோ, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கோ, இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவுக்கோ தெரியாமல் இருக்க நியாயமில்லை.

எனினும் பாரிஸில் நேற்று முன்தினம் கூடிய இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு, கொழும்பு அரசு கேட்டதை விட இரண்டரைக் கோடி டொலர்களைக் கூடுதலாக வழங்கியிருக்கிறது! மனித உரிமை மீறல், இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும் என்ற சொற்றொடர்கள் எல்லாம் வெறும் புருடாக்களே.

அமெரிக்காவின் செல்வாக்கு மேலோங்கி நிற்கும் உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியன காலால் இடும் கட்டளைகளை சிரசால் செய்து வருகிறது ஸ்ரீலங்கா!

ஏனைய நாடுகளும் அவ்வாறே தமது பொறிக்குள் விழவேண்டுமானால், என்ன குறை, தவறு இருந்தாலும் அவற்றை மூடி மறைத்து ஸ்ரீலங்காவுக்கு அதிக நிதி உதவி வழங்க வேண்டும் என்று உலக வங்கி உள்ளூரத் திட்டமிட்டிருக்கிறது.

அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலேயே இலங்கையின் பொருளாதாரம் வளர்ந்திருப்பதாக உருப்பெருக்கி, அதன் பொருளாதாரக் கொள்கைகளைப் பாராட்டி, ஸ்ரீலங்காவுக்கு வக்காலத்து வாங்கி அறிக்கை வெளியிட்டு விடயத்தை வென்றிருக்கிறது. இதுவே உள்ளார்ந்த உண்மை! உலக வங்கி நடத்தும் திரை மறைவு நாடகம்!!

# ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு இயலுமா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென தற்போது இரு பிரதான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதன்மூலம் ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

2. இப்போது அரசியல் தீர்வு பற்றி கவனம் செலுத்தக்கூடாது. யுத்தத்தில் வெற்றி காணும்வரை சென்று புலிகளை அழித்துவிட்டு அதன்பின் அரசியல் தீர்வு பற்றிக் கவனிக்கலாம்.

> இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைக்குத் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புக் கிளப்பியுள்ளது.
>
> அதனைக் கண்டித்து கலாநிதி ஜெயதேவ உயன்கொட 'லங்காதீப' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இதுவாகும்.

இவை தொடர்பாக தற்போது தொண்டமான், பௌத்த பிக்குகள், பௌத்த மத பிரமுகர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இவை தவிர அரசு தீர்க்கமான நிலையில் இந்த பிரச்சினை பற்றி எதுவும் முன்வைக்கவில்லை.

மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை முன்வைக்கட்டும் என அரசு கூறிவிட்டு வாளாவிருக்கிறது.

இருந்திருந்து விட்டு ஜனாதிபதி பிரேமதாசா விடும் அறிக்கைகள் மூலம் அவர் அரசியல் தீர்வை விரும்புவது தெரிகிறது. எனினும் அவர் ஓர் இலக்கை வைத்து இவ்வாறு தெரிவிப்பதில் ஒட்டிக்கொண்டு நிற்கிறார்.

தொண்டமான் யோசனை பற்றி பயப்பிராந்தி ஏற்படுத்துபவர்களின் வாதங்களைச் சற்று ஆராய்வோம்.

அவர்களின் பிரதானவாதம் என்னவெனில், புலிகள் பலமிழந்து போயிருக்கும் இத்தருணத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது அவர்கள் மீண்டும் பலமடைய உதவும் என்பதாகும். அப்படிச் செய்தால் புலிகளை வெல்ல சந்தர்ப்பம் தவறிப்போகும் என அவர்கள் கூறுகின்றனர். புலிகள் பலம் குறைந்துள்ளதாலேயே தொண்டமான் யோசனைகள் முன்வைக்கப்பட்டன என்ற முடிவுக்கும் அவர்கள் வந்துள்ளனர்.

### யாரைப் பின் தொடரும்

அரசு, தொண்டமானைப் பின் தொடரப் போகிறதா, அல்லது பிக்குகளினதும் பௌத்த பிரமுகர்களினதும் யோசனைகளைப் பின்தொடரப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

### சிங்கள இனவாதம் தலை தூக்குகிறது

அரசுக்குள்ளேயே இப்பிரச்சினை தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும். ஆனால் எதிர்காலத்தில் அரசு முகங்கொடுக்க வேண்டிய பாரிய பிரச்சினைகள் பல உண்டு. அடிப்படை சிங்கள இனவாதிகளின் கை ஓங்காமலும் யுத்தத்தை தவிர்த்து அரசியல் தீர்வு காண்பதற்கும் அரசுக்கு உள்ள இடர், தீர்வு காண்பதை கட்டுப்படுத்திவிட இடமுண்டு. 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின் தற்போது அடிப்படை சிங்கள இனவாதம் சிங்கள சமூகத்தில் தலை தூக்குவது தெரிகிறது.

1987—88 காலத்தைவிட, இப்போது வேறுபட்ட நிலைமை என்னவெனில், ஜே. வி. பியும் தேசபிரேமியும் இல்லாது இருப்பதே. அடுத்தது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இந்த இனவாத கோஷ்டிகளுடன் இன்னும் தொடர்பு வைத்துக் கொள்ளாதது. அநேகமாக ஸ்ரீ. ல. சு. க. இந்த இனவாத அரசியலிலிருந்து தூர நிற்க இடமுண்டு.

### யுத்தத்துக்கு உதவி கிடைப்பது சந்தேகம்

இச்சமயத்தில் யுத்த வழியை தொடர்ந்து எடுத்துச் செல்ல அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்பவை இலங்கைக்கு உதவியளிக்குமென்பதுமிகவும் சந்தேகத்திற்குரியது. வேறு எப்போதையும்விட இன்று இலங்கை மேற்குலக முதலாளித்துவ நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## அதன் மேலதிக பளுவால் பாதிக்கப்படுவோர் ஏழைகளே!

அதனால் இலங்கைக்கு உதவும் நாடுகள் அரசியல் தீர்வுக்கு வலியுறுத்தினால், பிரேமதாசாவால் அதனைக் கவனிக்காது தள்ளிப்போட முடியாது.

ஒரு பக்கத்தில் அடிப்படை சிங்கள இனவாதிகள் யுத்தத்தைத் தொடருமாறு வலியுறுத்த, மறுபுறம் உதவி அளிக்கும் நாடுகள் அரசியல் தீர்வுக்கு வலியுறுத்த, அரசின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பின் கதை போலாகிவிடும்.

இது தவிர நீண்ட காலத்

### உள்நாட்டு அரசியல்

துக்கு யுத்தத்தைத் தொடர்ந்து செல்வதற்கு இலங்கையால் இயலுமா என்ற பிரச்சினை அதிதீர்க்கமான முடிவு காணப்பட வேண்டிய ஒன்றாகும்.

யுத்தம் அவசியம் என்று கூறும் பயப்பிராந்தி காட்டும் சிங்கள பௌத்த பிரமுகர்கள் இதுபற்றி சிறிதும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

உண்மையில் யுத்தத்தினால் வளர்ச்சிப் பணிகளுக்குரிய செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. இலங்கையின் வருட வரவு செலவில் காற் பங்கு யுத்தத்துக்கு செலவழிக்கப்படுகிறது என்பதை இவர்கள் அலட்சியம் செய்வது தெரிகிறது.

### பளுவைச் சுமப்போரும் பாதிப்புறுவோரும்

இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினை என்னவென்றால், யுத்தத்தை நீடிப்பதால் ஏற்படும் மேலதிக செலவின் பளுவாகும்.

யுத்தம் வேண்டும் எனச் சொல்லும் மகாநாயக்கதேரர்கள், கொழும்பில் வாழும் தனவந்தர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், புதிய கதை சொல்பவர்கள் பளுவைச் சுமக்க வராது.

சாதாரண மக்களே பளுவைச் சுமக்க வேண்டும். யுத்தத்தில் உயிரிழப்பவர்கள் கை, கால்களை இழந்து ஊனமடைபவர்கள், ஏழைகளின் பிள்ளைகளே; யுத்தம் வேண்டுமென கூட்டங்களில் பேசிக் கொண்டும் பத்திரிகைகளில் கடிதம் எழுதிக் கொண்டும் இருக்கும் கல்விமான்களின் பிள்ளைகள் அல்லர்.

யுத்தத்தைத் தொடருமாறு உபதேசிப்பவர்கள் யுத்தத்தின் காரணமாக துக்ககரமான நிலையை எய்தியுள்ள தமிழ் மக்கள் பற்றியோ, வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் பற்றியோ, முஸ்லிம்கள் பற்றியோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

கொழும்பிலிருந்து கொண்டு யுத்தம் பிரகடனம் செய்வது ஒன்று; யுத்தத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நாசம் குறித்து இனவாதத்தை விடுத்து, பௌத்த மக்கள் மனிதாபிமானத்தோடு பார்ப்பது வேறொன்று அந்த மனிதாபிமானப் பார்வை தேவை.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு இதைத் தவிர வேறு வழி இல்லை.

★

## முல்லைத்தீவுக் கடலிலும் படையினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், பெப். 9

முல்லைத்தீவு கடல் பரப்பிலும் ஸ்ரீலங்காப் படையினர் அட்டகாசம் புரிந்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக அங்கு தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களைப் படையினர் தாக்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரணைப்பாலையைச் சேர்ந்த யேசுராசா, சின்னராசா ஆகியோர் கடலில் வைத்து தாக்கப்பட்டனர் என்றும்—

அவர்களின் படகில் இருந்த எரிபொருள் கடலுக்குள் வீசப்பட்டது என்றும்—

மற்றொரு படகில் சென்ற ஜீவராசா, றெஜினோல்ட் ஆகிய இருவரும் வள்ளத்தில் இருந்து கடலுக்குள் தள்ளப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

## 120 பேரின் பட்டியல் நாளை வெளியாகும்

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ், கல்விக் கோட்டப் பிரிவில் தற்காலிக ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள 120 பேரின் பெயர்ப் பட்டியல் நாளை வெளியிடப்படும்.

யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் இதனைத் தெரிவித்தார்.

தற்காலிக ஆசிரியர்களுக்கு முதல் இரண்டு வாரங்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. (ஒ-5)

## ஐ. நா.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நீதிமன்றம் வலுவுள்ள சட்ட அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது.

பதினைந்து நீதியரசர்களைக் கொண்ட இந்த நீதிமன்றத்துக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டிய தார்மீகக் கடப்பாடு ஐ. நாவில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடுகளுக்கும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## நெலுக்குளத்தில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், பெப். 9

வவுனியா நெல்லுக்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து முன்னேறும் நோக்குடன் கடந்த புதன்கிழமை முதல் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [உ-5]

## அணு ஆயுத மிரட்டலை சமாளிக்க இந்தியா தயார்!

பாகிஸ்தானின் அணுகுண்டு மிரட்டல் எதனையும் சமாளிக்க இந்தியா தயாராக இருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி நேற்று புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் மேற்கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தானுக்கு அணு ஆயுதம் செய்யும் ஆற்றல் இருப்பதாக அந்நாட்டின் வெளியுறவுச் செயலர் வாஷிங்டனில் தெரிவித்தது இந்தியாவுக்கு வியப்பைத் தரவில்லை. நமது பாதுகாப்பு ஆயத்த நிலை எந்த விதத்திலும் தொய்ந்துவிடவில்லை.

இப்படி மாதவ்சிங் சோலங்கி கூறினார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் ஊடுருவல் அறிவிப்புப் பற்றி அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, இதனை உறுதியாக ஒடுக்க வன்மையாகப் பதிலடி கொடுப்போம் என்று பதில் அளித்தார். (இ)

## செயலமர்வு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளையும், நாளை மறுதினமும் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கொத்தணிக் குழு அடிப்படையில் நடைபெறவுள்ளன.

பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர் ஆகிய கொத்தணி பாடசாலை ஆசிரியர்களுக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும்—

அம்பனை, அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், காங்கேசன்துறை, இளவாலை ஆகிய கொத்தணிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மகாஜனாக் கல்லூரி மண்டபத்திலும் செயலமர்வுகள் இடம் பெறும். [ஒ-5]

## யாழ். ஆஸ்பத்திரியில் மாதம் 500 குழந்தைகள்

யாழ். ஆஸ்பத்திரியில் மாதம் ஒன்றுக்கு சராசரி 500 குழந்தைகள் பிரசவிக்கப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் [1991] இங்கு 6 ஆயிரத்து 200 குழந்தைகள் பிறந்துள்ளன.

இந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளை விட அதிகம் என யாழ். ஆஸ்பத்திரி பதிவகப் பிரிவு புள்ளி விவரங்களில் இருந்து தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### பண்டிதர் திரு வே. சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ் ஆசான் பண்டிதர் வே. சண்முகலிங்கம் அவர்கள் காலமானார் என்பதை கவலையுடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் மறைவையொட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இறுதிக்கிரிகைகள் இன்று [09-02-92] ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் இணுவிலிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும், காலை 11 மணியளவில் அங்கு கூடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

09-02-92 அதிபர்

[C/1399] யாழ். இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் நகுலேசு

இராமலிங்கம் நகுலேசு (Retired Superintendent Of Traffic Post And Telecommunication Dept.) 04-02-1992 அன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் நாகேஸ்வரியின் கணவரும், பத்மினியின் (லண்டன்) தந்தையும், டாக்டர் தில்லையின் (லண்டன்) மாமனாரும், காலஞ் சென்றவர்களான கந்தையா, செல்லத்துரை, முருகேசு, அன்னலட்சுமி மற்றும் நடராசா, சிவகாமிப்பிள்ளை, இராசலெட்சுமி ஆகியோரின் சகோதரருமாவார்.

ஈமக்கிரியை இன்று (09-02-1992) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
ந. நாகேஸ்வரி,

கட்டுடை,
மானிப்பாய், [19646]

### திருமதி சுப்பையா தங்கமுத்து

மட்டுவில் வடக்கு ஆசிரியமணி காலஞ்சென்ற வே. சுப்பையா அவர்களின் அருமை மனைவியார் தங்கமுத்து 7-2-92 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, சண்முகநாதன் [முன்னாள் மக்கள் வங்கி, சாவகச்சேரி முகாமையாளர்], மகேஸ்வரன் [முன்னாள் பிராந்திய பொறியியலாளர் தொலைத் தொடர்பு திணைக்களம் யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற பத்மநாதன், யோகநாதன் [மிருக வைத்தியர் U. S. A.] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானாம்பிகை [இளைப்பாறிய ஆசிரியை], பத்மினி [Transkei], சுபத்ரா [U. S. A.] ஆகியோரின் மாமியாரும், கலாவல்லி ஜெயேந்திரன் [U. K.], ஜெகதீஸ்வரி [யாழ். பல்கலைக்கழகம்], ஜமுனா [U. K.], துஷ்யந்தன் [U. S. A.], மைதிலி [Transkei], ரஜீவ் [U. S. A.] ஜானகி [U. S. A.] ஆகியோரின் பேத்தியாரும், பிரணவனின் [U. K.] பூட்டியுமாவார். அன்னாரின் ஈமச் சடங்குகள் 8-2-92 [சனிக்கிழமை] கல்வயலில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரியில் தகனம் செய்யப்பட்டது என அறியத் தருகிறோம்.

தகவல்;
மட்டுவில் வடக்கு, சு. சண்முகநாதன்
சாவகச்சேரி. [5038] [மகன்]

### வீரசிங்கம் ஜேம்ஸ் துரைசிங்கம்

(இளைப்பாறிய யாழ். மாநகரசபை லிகிதர்)

யாழ்ப்பாணத்தை (விக்டோறியா வீதி) பிறப்பிடமாகக் கொண்டவரும், அத்தியடி இல. 15, அம்பலவாணர் வீதியில் வசித்தவருமாகிய J. V. துரைசிங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம், பத்மாவதி ஆகியோரின் அன்பு மகனும், அன்னமலரின் அன்புக் கணவரும், மோகன்ராஜ் (U. K.), சாமினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தர்சினி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜசிங்கம், மணிமேகலை (U. K.), காலஞ்சென்ற இராசமணி, பாலசிங்கம், இரத்தினசிங்கம் (Canada), ஜெயசிங்கம் (U. K.), குலசிங்கம் (U. K.), தவமணி (U. K.), பத்மினி (U. K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமலர், திருச்செல்வம், சந்திரேஸ்வரி, கேசல், அஞ்சலா, அன்புமலர், புஸ்பமலர், வீமராஜா ஆகியோரின் மைத்துனரும், நாகலிங்கம், மகேந்திரன் ஆகியோரின் சகலனும், கனகமணி, வல்லிபுரம் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (9-2-92) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இல. 15, அம்பலவாணர் வீதி, V. பாலசிங்கம்
அத்தியடி. [19645]

## பனம் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 9

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பனம் பொருள் கண்காட்சி ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இன்று காலை 9.00 மணிக்கு இதனைத் திறந்து வைப்பார். கண்காட்சி மாலை 5.00 மணி வரையும் நடைபெறும். இன்றும் நாளையும், இதனை நடத்த ஏற்பாடாகி உள்ளது.

பனை அபிவிருத்திச் சபையால் பயிற்றுவிக்கப்பட்ட பெண்களின் தயாரிப்புகளே கண்காட்சியில் இடம்பெற உள்ளன. [இ-10]

## சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 9

மாணவர் — ஆசிரியர்களுக்கான சதுரங்க விளையாட்டுச் சுற்றுப் போட்டி ஒன்றை "உதயன்" நிறுவனத்துடன் இணைந்து யாழ். கல்வித் திணைக்களம் நடத்த உள்ளது.

கல்வித்திணைக்கள உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராசா பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபத்தில், முதலில் இப்போட்டி கோட்டமட்டத்தில் நடத்தப்படும் எனவும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் மாவட்ட நிலைப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்களும், மாணவர்களில் 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டோரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது [இ-90]

## புளியங்குளத்தில் குண்டு வீச்சு!

கொழும்பு, பெப். 9

நெடுங்கேணிக்கு அருகே புளியங்குளம் பகுதியில் விமானப்படையினர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக கொழும்பில் நேற்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் —

வவுனியாப் பகுதியில் நடந்த ஒரு மோதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 4 படையினர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## தமிழ் .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட தமிழர்கள் கொழும்பிலுள்ள ஒரு முகவருக்கு 3 லட்சத்து 50ஆயிரம் ரூபா கொடுத்திருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

இளைஞர் தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்ய முடியும் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

13 தமிழர்களையும் டென்மார்க்குக்குத் திருப்பி அனுப்புமாறு நீதிவான் தனது தீர்ப்பில் உத்தரவிட்டிருந்தார். ]அ-10[

## 10க்கும் அதிக..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தலை நடத்தின என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின் போது பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம்—

நேற்று முன்தினம் மட்டக்களப்பு, இலக்கு என்ற இடத்தில் இடம்பெற்ற மோதலில் ஓர் அதிகாரி உட்பட 9 படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-5]

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலையில்

## 'ராகிங்'க்கு உள்ளானவர் உயிராபத்து நிலையில்!

கொழும்பு, பெப். 9

கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 'ராகிங்'க்கு உள்ளான மாணவர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்றை ஆதாரம் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

பழைய மாணவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் புதிய மாணவனான சரத் சுந்தர என்பவர் மீன் முள்ளைச் சாப்பிட்டார் என்றும்—

அதனால் அவர் பேசும் ஆற்றலை இழந்த நிலையில்— ஆஸ்பத்திரியில் ஆபத்தான கட்டத்தில் — இருந்து வருகிறார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மாணவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினாலும், பேசும் சக்தியை முற்றாக இழந்து விடுவார் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் குறித்து பொலீஸ் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள்கள் மோதின! சிறுவன் மரணம்!!

யாழ்ப்பாணம், பெப். 9

எதிரும் புதிருமாக வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு சிறுவன் உயிரிழந்தான். மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

முழங்காவில் கடையொன்றில் வேலை செய்யும் — வட்டுக்கோட்டையைச் சேர்ந்த — கேதீஸ்வரன் என்ற [13 வயது] சிறுவனே காயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்குட்படுத்தியபோது மரணமானான்.

முழங்காவிலில் கடை வைத்திருக்கும் — வட்டுக்கோட்டையைச் சேர்ந்த — கணபதிப்பிள்ளை சிவகுமார் [வயது 30] தர்மபுரத்தைச் சேர்ந்த முத்தையா இராசேந்திரம் [வயது 30], வாடகைக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுபவரான ஸ்ரீரங்கம் நாகலிங்கம் [வயது 31] ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுவனின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [உ-15]

## கேட்டதைவிட அதிகளவு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தன.

ஸ்ரீலங்கா அரசு மனித உரிமைகளை மீறுவது குறித்து மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது. எனினும் அரசு இப்போது திருப்திப்படுத்தும் வகையில் மனித உரிமைகளை பேண நடவடிக்கை எடுத்து வருவதாகவும் —

மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கவும் விசாரிக்கவும் ஆணைக்குழு ஒன்றை நிறுவியிருப்பதாகவும்—

பதில் வாதம் செய்யப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் சிபார்சுகளை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்த இணங்கியிருப்பதும் உதவி வழங்கும் நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

காணாமற் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் குறித்தும் மேற்கு நாடுகள் திருப்திப்படும் வகையில் ஸ்ரீலங்கா அரசு நடந்துகொள்வதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கியின் ஆதரவில் நடந்த இந்த மாநாட்டில்—

ஸ்ரீலங்கா 1991 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளைப் பாராட்டி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தன.

இக்காலப் பகுதியில் ஸ்ரீலங்காவின் பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது; உறுதியான பொருளாதார நடவடிக்கை நம்பிக்கையை ஏற்படுத்தியது என்று சர்வதேச நாணய சபையும்—

16 மாதங்களுக்கு முன்னர் நடந்த முந்திய கூட்டத்திற்குப் பின்னர் ஸ்ரீலங்கா பல துறைகளில் முன்னேற்றம் கண்டிருப்பதாக உலகவங்கியும்—

ஜனசக்தித் திட்டம், வீடமைப்புத் திட்டம், பாடசாலை மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றைப் பாராட்டி ஆசிய அபிவிருத்தி வங்கியும்— அறிக்கை சமர்ப்பித்திருந்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவில் ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி. நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. [அ-10-5]

## 8,000 ஈழத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாலசிங்கம் மேலும் கூறியதாவது;

இந்தியத் துருப்புகள் ஈழத்தை ஆக்கிரமித்த வேளையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர். தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட மாபெரும் கொலைக் [கிரிமினல்] குற்றம் இது. இந்திய அரசு விளைவித்த குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடருவது பற்றி அரசியல் சாசன வழக்கறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க விடுதலைப் புலிகள் மறுத்தனர். அன்று முதல் அனைத்துலக அரங்கில் விடுதலைப் புலிகளின் கண்ணியத்தைக் குறைப்பதற்கு இந்திய அரசு முற்பட்டு வருகிறது.

எனவே திரு. பிரபாகரனையும், திரு. பொட்டம்மானையும் நீதிமன்றத்தில் சமுகம் அளிக்கும்படி இந்திய அரசு அழைப்பாணை விடுத்தது ஆச்சரியமல்ல.

ஸ்ரீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சு நடத்த நாம் இன்னும் ஆர்வமாகத்தான் இருக்கிறோம். ஆனால் பேச்சு வார்த்தை விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவிடாது இந்தியா வேண்டுமென்றே தடைகளைப் போட்டு வருகிறது.

ஸ்ரீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானம் செய்து வைக்கத் தயார் என்று கொமன்வெல்த் மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் குறிப்பிட்டுள்ளன. ஆனால் அப்படியான நடவடிக்கைகள் அநாவசியமான — அத்துமீறிய— தலையீடுகள் என்று தெரிவித்து அத்தகைய நடவடிக்கைகளை இந்தியா தடை செய்து வருகிறது.— என்றார். [உ-இ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org